## பத்தாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 1

**1] மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென் கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம் - என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] ஏலாதி, கணிமேதாவியார்

2] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] திருவாசகம், மாணிக்கவாசகர்**

**2] பொய்தான் தவிர்ந் துன்னைப் போற்றி சயசய போற்றி என்னும் கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே. - என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] ஏலாதி, கணிமேதாவியார்

2] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] திருவாசகம், மாணிக்கவாசகர்**

**3] பொருந்தாதது எது? சொற்பொருள் :**

1] மெய் - உடல்

2] விதிர்விதிர்த்து - உடல் சிலிர்த்து

**3] விரை - குணம்**

4] நெகிழ - தளர

**குறிப்பு** :- விரை என்பதன் சரியான சொற்பொருள் மணம்.

**4] பொருந்தாதது எது? சொற்பொருள் :**

**1] ததும்பி - குறைந்து**

2] கழல் - ஆண்கள் காலில் அணியும் அணிகலன் (இங்கு ஆகுபெயராய் இறைவனின் திருவடியைக் குறித்தது)

3] சயசய - வெல்க வெல்க

4] குருதி - இரத்தம்

**குறிப்பு** :- ததும்பி என்பதன் சரியான சொற்பொருள் பெருகி.

**5] விடுபட்டதை நிரப்புக. பகுபத உறுப்பிலக்கணம்.**

போற்றி - போற்று + இ. போற்று - பகுதி, இ - என்பது என்ன?

1] ஆண்பால் வினைமுற்று விகுதி

2] பெயரெச்ச விகுதி

**3] வினையெச்ச விகுதி**

4] இவற்றில் ஏதுமில்லை

**6] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :-**

1] விடேன் - தன்மை ஒருமை வினைமுற்று

**2] ஒழுக்கம் - பண்புப்பெயர்**

3] படும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று

4] காக்க - வியங்கோள் வினைமுற்று

**குறிப்பு** :- ஒழுக்கம் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு தொழிற்பெயர்.

**7] கீழ்க்கண்டவர்களுள், சைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவர் உள்ளார். அவர் யார்?**

1] இராமானுஜர்

2] பிள்ளை லோகாச்சாரியர்

3] வேதாந்த தேசிகர்

**4] மாணிக்கவாசகர்**

**8] மாணிக்கவாசகர் ------------ இல் பிறந்தவர். இவ்வூர், மதுரைக்கு அருகில் உள்ளது.**

1] தேரழுந்தூர்

**2] திருவாதவூர்**

3] சாத்தூர்

4] வடுவூர்

**9] -------------- என்பவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார்.**

1] இராமானுஜர்

2] பிள்ளை லோகாச்சாரியர்

3] வேதாந்த தேசிகர்

**4] மாணிக்கவாசகர்**

**10] பாண்டியனுக்காகக் குதிரை வாங்கச் சென்றபோது, திருபெருந்துறை இறைவன் திருவருளால் ஆட்கொள்ளப் பெற்றவர், யார்?**

1] இராமானுஜர்

2] பிள்ளை லோகாச்சாரியர்

3] வேதாந்த தேசிகர்

**4] மாணிக்கவாசகர்**

**11] திருபெருந்துறை இறைவனை, மெய்யுருகப் பாடிக் கசிந்து கண்ணீர் மல்க அழுது தொழுதவர். இதனால் ------------ என்பவரை, "அழுது அடியடைந்த அன்பர்" என்பர்.**

1] இராமானுஜர்

**2] மாணிக்கவாசகர்**

3] திருநாவுக்கரசர்

4] சுந்தரர்

**12] திருவாசகமும் திருக்கோவையாரும் ------------- என்பவர் எழுதிய நூல்.**

1] இராமானுஜர்

**2] மாணிக்கவாசகர்**

3] திருநாவுக்கரசர்

4] சுந்தரர்

**13] இவர் எழுப்பிய கோவில், தற்பொழுது ஆவுடையார்கோவில் என வழங்கப்படும், திருப்பெருந்துறையில் (புதுக்கோட்டை மாவட்டம்) உள்ளது.**

1] இராமானுஜர்

**2] மாணிக்கவாசகர்**

3] திருநாவுக்கரசர்

4] சுந்தரர்

**14] மாணிக்கவாசகர் - அவர்களின் காலம்?**

1] கி.பி. பத்தாம் நூற்றாண்டு

2] கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

3] கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு

**4] கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு**

**15] சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் ---------------- திருமுறையில் திருவாசகமும் திருக்கோவையாரும் உள்ளன.**

1] ஏழாம்

**2] எட்டாம்**

3] ஒன்பதாம்

4] பத்தாம்

**16] திருவாசகத்தில் ------------ பாடல்கள் இடம் பெற்றுள்ளன.**

1] 1330

2] 431

3] 501

**4] 658**

**17] ---------- கல்நெஞ்சையும் கசிந்துருகச் செய்யுமாதலால், "---------- உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்னும் தொடர் வழங்கலாயிற்று.**

1] மணிமேகலை

2] திருக்குறள்

**3] திருவாசகம்**

4] கம்பராமாயணம்

**18] திருவாசகத்தின் சிறப்பை உணர்ந்த ------------- என்பவர் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.**

1] கால்டுவெல்

2] கெப்ளிங்

**3] ஜி.யு. போப்**

4] வீரமாமுனிவர்

**19] திரு என்பது, நூலின் சிறப்பை உணர்த்த வந்த அடைமொழி; சதகம் என்பது, -------- பாடல்களைக் கொண்ட நூலைக் குறிக்கும்.**

1] பத்து **2] நூறு** 3] ஆயிரம் 4] பத்தாயிரம்

**20] மாணிக்கவாசகர் பாடல்கள் --------- திருமுறையில் இடம்பெற்றுள்ளன.**

1] ஏழாம்

**2] எட்டாம்**

3] ஒன்பதாம்

4] பத்தாம்

**21] உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரைவிடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப்பொறுத்தல், இடையறா நிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனத்தைக் கவர்கின்றவர் யாரும் இல்லை - என்று கூறியவர் யார்?**

1] கால்டுவெல்

2] கெப்ளிங்

**3] ஜி.யு. போப்**

4] வீரமாமுனிவர்

**22] விடுபட்டதை நிரப்புக.**

**ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்**

**------- --------- ---------**

1] பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்

2] இழிந்த பிறப்பாய் விடும்

3] தேரினும் அஃதே துணை

**4] உயிரினும் ஓம்பப் படும்**

**23] விடுபட்டதை நிரப்புக.**

**மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்**

**--------- ----------- -----------**

**1] பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்**

2] இழிந்த பிறப்பாய் விடும்

3] தேரினும் அஃதே துணை

4] உயிரினும் ஓம்பப் படும்

**24] விடுபட்டதை நிரப்புக.**

**ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**

**----------- ------------ ---------**

1] பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்

**2] இழிந்த பிறப்பாய் விடும்**

3] தேரினும் அஃதே துணை

4] உயிரினும் ஓம்பப் படும்

**25] விடுபட்டதை நிரப்புக.**

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**

**----------- ------------ ---------**

1] பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்

2] இழிந்த பிறப்பாய் விடும்

**3] தேரினும் அஃதே துணை**

4] உயிரினும் ஓம்பப் படும்

**26] விடுபட்டதை நிரப்புக.**

**அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை**

**--------- ------------ ----------**

**1] ஒழுக்கம் இலான்கண் உயர்வு**

2] ஏதம் படுபாக் கறிந்து

3] எய்துவர் எய்தாப் பழி

4] என்றும் இடும்பை தரும்

**27] விடுபட்டதை நிரப்புக.**

**ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்**

---------- ------------ ----------

1] ஒழுக்கம் இலான்கண் உயர்வு

**2] ஏதம் படுபாக் கறிந்து**

3] எய்துவர் எய்தாப் பழி

4] என்றும் இடும்பை தரும்

**28] விடுபட்டதை நிரப்புக.**

**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**

---------- ------------ ----------

1] ஒழுக்கம் இலான்கண் உயர்வு

2] ஏதம் படுபாக் கறிந்து

**3] எய்துவர் எய்தாப் பழி**

4] என்றும் இடும்பை தரும்

**29] விடுபட்டதை நிரப்புக.**

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**

---------- ------------ ----------

1] ஒழுக்கம் இலான்கண் உயர்வு

2] ஏதம் படுபாக் கறிந்து

3] எய்துவர் எய்தாப் பழி

**4] என்றும் இடும்பை தரும்**

**30] விடுபட்டதை நிரப்புக.**

**ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய**

--------- ------------ ----------

1] ஒழுக்கம் இலான்கண் உயர்வு

2] ஏதம் படுபாக் கறிந்து

**3] வழுக்கியும் வாயாற் சொலல்**

4] என்றும் இடும்பை தரும்

**31] விடுபட்டதை நிரப்புக.**

**உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்**

--------- ------------ ----------

1] ஒழுக்கம் இலான்கண் உயர்வு

2] ஏதம் படுபாக் கறிந்து

**3] கல்லார் அறிவிலா தார்**

4] என்றும் இடும்பை தரும்

**32] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] விழுப்பம் - சிறப்பு

2] ஓம்பப்படும் - காத்தல்வேண்டும்

**3] பரிந்து - வெறுத்தல்**

4] தேரினும் - ஆராய்ந்து பார்த்தாலும்

**குறிப்பு** :- பரிந்து என்பதன் சரியான சொற்பொருள் விரும்பி.

**33] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] குடிமை - உயர்குடி

2] இழுக்கம் - ஒழுக்கம் இல்லாதவர்

3] அழுக்காறு - பொறாமை

**4] ஆக்கம் - கோபம்**

**குறிப்பு** :- ஆக்கம் என்பதன் சரியான சொற்பொருள் செல்வம்.

**34] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] ஒல்கார் - விலகமாட்டார்

2] உரவோர் - மனவலிமையுடையோர்

**3] ஏதம் - உதவுதல்**

4] எய்துவர் - அடைவர்

**குறிப்பு** :- ஏதம் என்பதன் சரியான சொற்பொருள் குற்றம்.

**35] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

**1] இடும்பை - இன்பம்**

2] வித்து - விதை

3] ஒல்லாவே - இயலாவே

4] கேழல் - பன்றி

**குறிப்பு** :- இடும்பை என்பதன் சரியான சொற்பொருள் துன்பம்.

**36] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] உலகம் - உயர்ந்தோர்

2] ஒட்ட - பொருந்த

3] ஒழுகல் - நடத்தல், வாழ்தல்

**4] வணங்கி - வாழ்த்துதல்**

**குறிப்பு** :- வணங்கி என்பதன் சரியான சொற்பொருள் பணிந்து.

**37] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :**

1] ஒழுக்கம் - தொழிற்பெயர்

2] படும் - செய்யும் என்னும் வாய்பாட்டு

வினைமுற்று

3] காக்க - வியங்கோள் வினைமுற்று

**4] பரிந்து, தெரிந்து - பெயரெச்சங்கள்**

**குறிப்பு** :- பரிந்து, தெரிந்து என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு வினையெச்சம்.

**38] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :**

**1] இழிந்த பிறப்பு - வினையெச்சம்**

2] கெடும் - செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று

3] கொளல் - அல் ஈற்றுத் தொழிற்பெயர்

4] உடையான் - வினையாலணையும் பெயர்

**குறிப்பு** :- இழிந்த பிறப்பு என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு பெயரெச்சம்.

**39] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :**

**1] உரவோர் - வினைமுற்று**

2] எய்தாப் பழி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

3] எய்துவர் - பலர்பால் வினைமுற்று

4] நல்லொழுக்கம், தீயொழுக்கம் - பண்புத்தொகைகள்

**குறிப்பு** :- உரவோர் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு வினையாலணையும் பெயர்.

**40] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :**

**1] சொலல் - சொல்லல் என்பதன் இடைக்குறை**

2] அருவினை - பண்புத்தொகை

3] அறிந்து - வினையெச்சம்

4] கலங்காது - எதிர்மறை வினையெச்சம்

**குறிப்பு** :- சொலல் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு தொழிற்பெயர்.

**41] பொருந்தாதது எது? சொற்பொருள்:-**

**1] கூம்பும் - வாய்ப்புள்ள**

2] சீர்த்த இடம் - உரிய காலம்

3] எய்தற்கு - கிடைத்தற்கு

4] இயைந்தக்கால் - கிடைத்தபொழுது

**குறிப்பு** :- கூம்பும் என்பதன் சரியான சொற்பொருள் வாய்ப்பற்ற.

**42] பொருந்தாதது எது? சொற்பொருள்:-**

**1] செறுநர் - நண்பர்**

2] சுமக்க - பணிக

3] இறுவரை - முடிவுக்காலம்

4] கிழக்காந்தலை - தலைகீழ் (மாற்றம்)

**குறிப்பு** :- செறுநர் என்பதன் சரியான சொற்பொருள் பகைவர்.

**43] பொருந்தாதது எது? சொற்பொருள்:-**

**1] பொள்ளென - மெதுவாக**

2] புறம்வேரார் - வெளிப்படுத்தமாட்டார்

3] உள்வேர்ப்பர் - மனத்தினுள் மறைத்து வைத்திருப்பர்

4] ஒள்ளியவர் - அறிவுடையார்

**குறிப்பு** :- பொள்ளென என்பதன் சரியான சொற்பொருள் உடனே.

**44] பொருந்தாதது எது? சொற்பொருள்:-**

1] ஒடுக்கம் - அடங்கியிருப்பது

2] பொருதகர் - ஆட்டுக்கடா

3] பேருந்தகைத்து - பின் வாங்கும் தன்மையது

**4] ஞாலம் - அறிவு**

**குறிப்பு** :- ஞாலம் என்பதன் சரியான சொற்பொருள் உலகம்.

**45] பொருந்தாதது எது? சொற்பொருள்:-**

1] அருவினை - செய்தற்கரிய செயல்

2] திரு - செல்வம்

**3] தீராமை - நீங்குதல்**

4] கூகை - கோட்டான்

**குறிப்பு** :- தீராமை என்பதன் சரியான சொற்பொருள் நீங்காமை

**46] இகல் என்பதன் சொற்பொருள் என்ன?**

1] நட்பு **2] பகை** 3] உணவு 4] அறிவு

**47] அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை**

**ஒழுக்கம் இலான்கண் உயர்வு - இந்த குறளில் பயின்று வந்துள்ள அணி?**

1] பிறிது மொழிதல் அணி

2] உருவக அணி

**3] உவமையணி**

4] வேற்றுமை அணி

**48] ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**

**தாக்கற்குப் பேருந் தகைத்து - இந்த குறளில் பயின்று வந்துள்ள அணி?**

1] பிறிது மொழிதல் அணி

2] உருவக அணி

**3] உவமையணி**

4] வேற்றுமை அணி

**49] கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**

**குத்தொக்க சீர்த்த இடத்து - இந்த குறளில் பயின்று வந்துள்ள அணி?**

1] பிறிது மொழிதல் அணி

2] உருவக அணி

**3] உவமையணி**

4] வேற்றுமை அணி

**50] விடுபட்டதை நிரப்புக.**

**பகல்வெல்லும் கூகையைக் காக்கை, இகல்வெல்லும்**

--------- ------------- ------------

1] கருதி இடத்தாற் செயின்

2] காலம் அறிந்து செயின்

3] தீராமை யார்க்குங் கயிறு

**4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது**

**51] விடுபட்டதை நிரப்புக.**

**ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்**

--------- ------------- ------------

**1] கருதி இடத்தாற் செயின்**

2] காலம் அறிந்து செயின்

3] தீராமை யார்க்குங் கயிறு

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**52] விடுபட்டதை நிரப்புக.**

**அருவினை என்ப உளவோ, கருவியாற்**

--------- ------------- ------------

1] கருதி இடத்தாற் செயின்

**2] காலம் அறிந்து செயின்**

3] தீராமை யார்க்குங் கயிறு

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**53] விடுபட்டதை நிரப்புக.**

**பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்**

--------- ------------- ------------

1] கருதி இடத்தாற் செயின்

2] காலம் அறிந்து செயின்

**3] தீராமை யார்க்குங் கயிறு**

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**54] விடுபட்டதை நிரப்புக.**

**காலம் கருதி இருப்பர் கலங்காது**

-------- ------------ -----------

1] கருதி இடத்தாற் செயின்

2] காலம் அறிந்து செயின்

**3] ஞாலம் கருது பவர்**

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**55] விடுபட்டதை நிரப்புக.**

**ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**

-------- ------------ -----------

1] கருதி இடத்தாற் செயின்

2] காலம் அறிந்து செயின்

3] தீராமை யார்க்குங் கயிறு

**4] தாக்கற்குப் பேருந் தகைத்து**

**56] விடுபட்டதை நிரப்புக.**

**பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்**

-------- ------------ -----------

**1] துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்**

2] காலம் அறிந்து செயின்

3] தீராமை யார்க்குங் கயிறு

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**57] விடுபட்டதை நிரப்புக.**

**செறுநரைக் காணின் சுமக்க இறுவரை**

**--------- ------------- ------------**

1] கருதி இடத்தாற் செயின்

**2] காணின் கிழக்காம் தலை**

3] தீராமை யார்க்குங் கயிறு

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**58] விடுபட்டதை நிரப்புக.**

**எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே**

**--------- ------------- ------------**

1] கருதி இடத்தாற் செயின்

2] காலம் அறிந்து செயின்

**3] செய்தற் கரிய செயல்**

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**59] விடுபட்டதை நிரப்புக.**

**கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**

**--------- ------------- ------------**

1] கருதி இடத்தாற் செயின்

2] காலம் அறிந்து செயின்

**3] குத்தொக்க சீர்த்த இடத்து**

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**60] ஊக்கம் உடையவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கியிருப்பதானது, -------- பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்கும் தன்மையைப் போன்றது.**

1] புலி

2] சிங்கம்

3] ஆந்தை

**4] ஆட்டுக்கடா**

**61] தமிழுலகம் இவரை முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில்புலவர், பெருநாவலர் முதலிய பெயர்களால் போற்றுகின்றது.**

1] பாரதியார்

2] தொல்காப்பியர்

3] கம்பர்

**4] திருவள்ளுவர்**

**62] பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் பொதுநெறி காட்டியவர் --------.**

1] பாரதியார்

2] தொல்காப்பியர்

3] கம்பர்

**4] திருவள்ளுவர்**

**63] திருவள்ளுவர், ---------- இல் பிறந்தவர் என அறிஞரால் உறுதி செய்யப்பட்டுத் திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்படுகிறது.**

1] கி.மு 27

**2] கி.மு 31**

3] கி.பி 27

4] கி.பி. 31

**64] தமிழக அரசு, தைத் திங்கள் ---------------- நாளைத் திருவள்ளுவர் நாளாக அறிவித்துக் கொண்டாடி வருகின்றது.**

1] பதிமூன்றாம்

**2] இரண்டாம்**

3] நான்காம்

4] முப்பத்தி ஒன்றாம்

**65] -------- என்னும் இந்நூல் நாடு, மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்கிறது.**

1] மணிமேகலை

2] கம்பராமாயணம்

3] சிலப்பதிகாரம்

**4] திருக்குறள்**

**66] உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் நூல் எது?**

1] மணிமேகலை

2] கம்பராமாயணம்

3] சிலப்பதிகாரம்

**4] திருக்குறள்**

**67] திருக்குறள் ---------- நூல்களுள் ஒன்று.**

1] ஐம்பெரும் காப்பியம்

2] ஐஞ்சிறும் காப்பியம்

3] பதினெண் மேற்கணக்கு

**4] பதினெண்கீழ்க்கணக்கு**

**68] இஃது அறம், பொருள், இன்பம் என முப்பாலாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒன்பது இயல்களையும் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் கொண்டு விளங்குகிறது.**

1] மணிமேகலை

2] கம்பராமாயணம்

3] சிலப்பதிகாரம்

**4] திருக்குறள்**

**69] ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் முதலிய உலகமொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.**

1] மணிமேகலை

2] கம்பராமாயணம்

3] சிலப்பதிகாரம்

**4] திருக்குறள்**

**70] திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். தமிழ்ச் சான்றோர் பலரால் இயற்றப்பட்ட ---------, திருக்குறளின் பெருமைகளைப் போற்றிப் புகழ்கிறது.**

**1] திருவள்ளுவமாலை**

2] ஆத்திச்சூடி

3] நாலடியார்

4] கம்பராமாயணம்

**71] "வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே" என்றும், "இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே" என்றும், -------------- என்பவர் திருக்குறளைப் போற்றி புகழ்ந்துள்ளார்.**

1] பாரதியார்

2] இளங்கோவடிகள்

**3] பாரதிதாசன்**

4] நாமக்கல் கவிஞர்

**72] வெல்லாத தில்லை திருவள்ளு வன்வாய் விளைத்த வற்றுள், பொல்லாத தில்லை புரைதீர்ந்த வாழ்விநிலே அழைத்துச் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] இளங்கோவடிகள்

**3] பாரதிதாசன்**

4] நாமக்கல் கவிஞர்

**73] செல்லாத தில்லை பொதுமறை யான திருக்குறளில் இல்லாத தில்லை இணையில்லை முப்பாலுக்கிந் நிலத்தே - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] இளங்கோவடிகள்

**3] பாரதிதாசன்**

4] நாமக்கல் கவிஞர்

**74] மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் --------- இல் திருக்குறளை முதன் முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டார்.**

1] 1912 **2] 1812** 3] 1857 4] 1957

**75] திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல்**

1] நால்வர் நான்மணிமாலை

**2] திருவள்ளுவமாலை**

3] இரட்டைமணிமாலை

4] இவற்றில் ஏதுமில்லை

**76] திருக்குறள் --------- வெண்பாக்களால் ஆன நூலாகும்.**

1] சிந்தியல்

**2] குறள்**

3] நேரிசை

4] இவற்றில் ஏதுமில்லை

**77] 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர்**

1] பாரதியார்

2] சுரதா

**3] பாரதிதாசன்**

4] வாணிதாசன்

**78] வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு; நுணங்கிநூல் நோக்கி நுழையா - இணங்கிய - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] கம்பராமாயணம், கம்பர்

**2] ஏலாதி, கணிமேதாவியார்**

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

4] சிறுபஞ்சமூலம், காரியாசான்

**79] பால்நோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்; நூல்நோக்கி வாழ்வான் நுனித்து - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] கம்பராமாயணம், கம்பர்

**2] ஏலாதி, கணிமேதாவியார்**

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

4] சிறுபஞ்சமூலம், காரியாசான்

**80] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வணங்கி - பணிந்து

**2] மாண்டார் - பகைவர்**

3] நுணங்கிய நூல் - நுண்ணறிவு நூல்கள்

4] நோக்கி - ஆராய்ந்து

**குறிப்பு** :- மாண்டார் என்பதன் சரியான சொற்பொருள் மாண்புடைய சான்றோர்.

**81] இலக்கணக்குறிப்பு தருக? நூல்நோக்கி.**

**1] இரண்டாம் வேற்றுமைத்தொகை**

2] மூன்றாம் வேற்றுமைத்தொகை

3] வியங்கோள் வினைமுற்று

4] வினைத்தொகை

**82] இலக்கணக்குறிப்பு தருக? பழியில்லா மன்னன்.**

**1] ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

2] மூன்றாம் வேற்றுமைத்தொகை

3] வியங்கோள் வினைமுற்று

4] வினைத்தொகை

**83] விடுபட்டதை நிரப்புக. பகுபத உறுப்பிலக்கணம் :- நோக்கி - நோக்கு + இ. ( நோக்கு - பகுதி, இ - ------------? ) இ - என்பது என்ன?**

1] ஆண்பால் வினைமுற்று விகுதி

2] பெயரெச்ச விகுதி

**3] வினையெச்ச விகுதி**

4] இவற்றில் ஏதுமில்லை

**84] விடுபட்டதை நிரப்புக. பகுபத உறுப்பிலக்கணம் :- வாழ்வான் - வாழ் + வ் + ஆன். வாழ் - பகுதி, வ் - --------?, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி . இங்கு வ் - என்பது என்ன?**

1] இறந்தகால இடைநிலை

2] நிகழ்கால இடைநிலை

**3] எதிர்கால இடைநிலை**

4] இவற்றில் ஏதுமில்லை

**85] விடுபட்டதை நிரப்புக. பகுபத உறுப்பிலக்கணம் :- நுனித்து - நுனி + த் + த் + உ. நுனி - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, உ - ------------?**

1] ஆண்பால் வினைமுற்று விகுதி

2] பெயரெச்ச விகுதி

**3] வினையெச்ச விகுதி**

4] இவற்றில் ஏதுமில்லை

**86] ஏலாதியை இயற்றியவர் -------------?**

1] காரியாசன்

**2] கணிமேதாவியார்**

3] விளம்பி நாகனார்

4] முன்றுறை அரையனார்

**87] கணிமேதாவியார் அவர்களுக்கு ---------- என்னும் மற்றொரு பெயருமுண்டு.**

1] கனி இன்சொல்லர்

2] கணிவாக்கியர்

**3] கணிமேதையர்**

4] இவற்றில் ஏதுமில்லை

**88] கணிமேதாவியார் ---------- சமயத்தவர் என்பர்.**

1] புத்த

**2] சமண**

3] இந்து

4] ஜொராஷ்ட்ரியம்

**89] ------- என்பவர், சமண சமயத்திற்கே உரிய கொல்லாமை முதலான உயரிய அறக்கருத்துகளை ஏலாதியில் வலியுறுத்திக் கூறுகிறார்.**

1] காரியாசன்

**2] கணிமேதாவியார்**

3] விளம்பி நாகனார்

4] முன்றுறை அரையனார்

**90] கணிமேதாவியார் அவர்களின் காலம் --------?**

**1] கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு**

2] கி.பி. ஆறாம் நூற்றாண்டு

3] கி.பி. ஏழாம் நூற்றாண்டு

4] கி.பி. எட்டாம் நூற்றாண்டு

**91] --------- என்னும் இவர், திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.**

1] காரியாசன்

**2] கணிமேதாவியார்**

3] விளம்பி நாகனார்

4] முன்றுறை அரையனார்

**92] ஏலாதி ---------------- நூல்களுள் ஒன்று.**

1] பதினெண்மேற்கணக்கு

**2] பதினெண்கீழ்க்கணக்கு**

3] ஐஞ்சிறும் காப்பியங்கள்

4] ஐம்பெருங் காப்பியங்கள்

**93] --------- என்னும், இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட எண்பத்தொரு வெண்பாக்களைக் கொண்டுள்ளது.**

1] முதுமொழிக்காஞ்சி

2] இனியவை நாற்பது

3] நாலடியார்

**4] ஏலாதி**

**94] ------------ என்னும் இந்நூல், நான்கடிகளில் ஆறு அருங்கருத்துகளை நவில்கிறது. இந்நூல் தமிழருக்கு அருமருந்து போன்றது.**

1] முதுமொழிக்காஞ்சி

2] இனியவை நாற்பது

3] நாலடியார்

**4] ஏலாதி**

**95] ஏலம் என்னும் மருந்துப்பொருளை முதன்மையாகக் கொண்டு இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருளுக்கு ---------- என்பது பெயர்.**

1] திரிகடுகம்

2] இனியவை நாற்பது

3] நாலடியார்

**4] ஏலாதி**

**96] வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு; நுணங்கிநூல் நோக்கி நுழையா - இணங்கிய; பால்நோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்; நூல்நோக்கி வாழ்வான் நுனித்து - இந்த பாடல் ஏலாதி நூலில் எத்தனையாவது பாடலாக அமைந்துள்ளது?**

1] 39 2] 49 **3] 59** 4] 69

**97] மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள்**

1] திருக்குறள், நன்னூல்

**2] திரிகடுகம், ஏலாதி**

3] நற்றிணை, அகநானூறு

4] இவற்றில் ஏதுமில்லை

**98] வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம் வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி - என்று தமிழின் பெருமையைப் பறைசாற்றியவர் யார்?**

1] திரு.வி.க

**2] பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

3] அண்ணா

4] மபொ.சிவஞானம்

**99] திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம் - என்று -------- என்பவர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.**

1] திரு.வி.க

2] பாவலரேறு பெருஞ்சித்திரனார்

3] அண்ணா

**4] பரிதிமாற்கலைஞர்**

**100] "தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை என வரும் பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி. அதுவே நம்மொழி" என்பார் ---------?**

1] பாவலரேறு பெருஞ்சித்திரனார்

2] அண்ணா

3] பரிதிமாற்கலைஞர்

**4] பாவாணர்**

**101] ஈராயிரமாண்டுகட்கும் மேற்பட்ட வரலாற்றுத் தொன்மையுடைய மொழிகள் சிலவே. அவை தமிழ், சீனம், சமற்கிருதம், இலத்தீன், ஈப்ரு, கிரேக்கம் ஆகியன. இவற்றுள் ---------, ---------- வழக்கிழந்து போயின.**

1] சீனம், சமற்கிருதம்

**2] இலத்தீன், ஈப்ரு**

3] ஈப்ரு, கிரேக்கம்

4] சீனம், ஈப்ரு

**102] செம்மொழித் தகுதிப்பாடுகள் : 1.தொன்மை, 2.பிறமொழித் தாக்கமின்மை, 3.தாய்மை, 4.தனித்தன்மை, 5.இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு, 6.பொதுமைப் பண்பு, 7.நடுவுநிலைமை, 8.பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு, 9.உயர் சிந்தனை, 10.கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு, 11.மொழிக் கோட்பாடு எனப் பதினொரு தகுதிக் கோட்பாடுகளை அறிவியல் தமிழறிஞர் ------------- என்பவரும், மொழிவல்லுனர்களும் வரையறுத்துள்ளார்கள்.**

1] பாவாணர்

2] பரிதிமாற்கலைஞர்

3] பெருஞ்சித்திரனார்

**4] முஸ்தபா**

**103] முதல் மாந்தன் தோன்றிய இடம் ------------.**

**1] குமரிக் கண்டம்**

2] ஐரோவாசியா

3] யூரேசியா

4] ஓசியானியா

**104] உலகம் தோன்றியபோதே தோன்றிய தமிழை அதன் தொன்மையைக் கருதி 'என்றுமுள தென்தமிழ்' என்பார் --------.**

1] பாவாணர்

2] பரிதிமாற்கலைஞர்

3] பெருஞ்சித்திரனார்

**4] கம்பர்**

**105] கீழ்க்கண்ட கூற்று எந்த மொழியைப்பற்றிய கூற்று?**

**பிறமொழிச் சொற்களை நீக்கினால் பல மொழிகள் இயங்கா. ஆனால், --------- ஒன்றே பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் இனிதின் இயங்கவல்லது. மிகுதியான வேர்ச்சொற்களைக் கொண்ட மொழி, ------------. அவ்வேர்ச்சொற்களைக் கொண்டே புத்தம் புது கலைச்சொற்களைத் ---------- மொழியால் உருவாக்கிக் கொள்ளவியலும்.**

1] சீனம்

2] கிரேக்கம்

3] சமற்கிருதம்

**4] தமிழ்**

**106] தமிழ்மொழியானது திராவிடமொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய மொழிகளுக்குத் தாய்மொழியாகத் திகழ்கிறது. அது பிராகுயி முதலிய வடபுல மொழிகளுக்கும் தாயாக விளங்குகிறது என்பார் -----------.**

1] ஜி.யு.போப்

2] வீரமாமுனிவர்

3] கெல்லட்

**4] கால்டுவெல்**

**107] ஆயிரத்தெண்ணூறு மொழிகளுக்கு வேர்ச்சொற்களையும், நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப்பெயர்களையும் தந்துள்ளது --------- மொழி.**

1] சமற்கிருதம்

2] வடமொழி

**3] தமிழ்**

4] இலத்தீன்

**108] கீழ்க்கண்ட கூற்று எந்த மொழி மற்றும் இனத்தவர் பற்றிய கூற்று?**

**இயல், இசை, நாடகம் எனும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது ---------. --------- அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர்.**

1] வடமொழி, வட நாட்டினர்

2] சீனம், சீனர்

**3] தமிழ், தமிழர்**

4] அரபு, அரேபியர்

**109] ---------- நூல்,மாந்தர் இனத்திற்கே வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்தளித்தது.**

1] சிலப்பதிகாரம்

2] கம்பராமாயணம்

**3] திருக்குறள்**

4] ஆத்திச்சூடி

**110] உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள். இவற்றின் மொத்த அடிகள் ---------. அக்காலத்தே இவ்வளவிற்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்பது உலக இலக்கியங்களை ஆய்ந்த ------------ என்னும் செக் நாட்டு மொழியியல் பேரறிஞரின் முடிவு.**

1] 2990, மாக்சு முல்லர்

2] 1555, யரோசுலவ் வசேக்

**3] 26,350, கமில்சுவலபில்**

4] 1330, கெல்லட்

**111] -------- என்னும் மொழி நூலறிஞரே தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும், அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழியென்றும் பாராட்டியிருக்கின்றார்.**

1] கெல்லட்

2] கமில் சுவலபில்

**3] மாக்சுமுல்லர்**

4] கால்டுவெல்

**112] சங்க இலக்கியங்களை ----------- எனலாம்.**

1] உலக இலக்கியம்

2] நாட்டு இலக்கியம்

**3] மக்கள் இலக்கியம்**

4] தெய்வ இலக்கியம்

**113] தமிழ் இலக்கணம் படிக்கப்படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்பார் -----------.**

1] மாக்சு முல்லர்

2] கமில் சுவலபில்

**3] கெல்லட்**

4] கால்டுவெல்

**114] நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழைமையானது -------------. இஃது எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கும் இலக்கணம் கூறுகின்றது.**

1] புறப்பொருள் வெண்பாமாலை

2] அவிநயம்

**3] தொல்காப்பியம்**

4] வீரசோழியம்

**115] தொல்காப்பியரின் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சீத்தலைச் சாத்தனார்

2] ஔவையார்

3] காக்கைப் பாடியனார்

**4] அகத்தியர்**

**116] தொல்காப்பியரின் ஆசிரியராகிய அகத்தியர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் எழுதினார். அந்நூலுக்கு -------- என்று பெயர்.**

1] அறிவியல் இலக்கண நூல்

2] ஐம்பொருள் இலக்கண நூல்

3] ஔடதம்

**4] அகத்தியம்**

**117] சரியான வரிசையில் உள்ள வாக்கியத்தை தேர்வு செய்க.**

1] கொண்டனர் அன்புள்ளம் செம்புலப் பெயல் நீர்போல

2] நீர்போல அன்புள்ளம் செம்புலப் பெயல் கொண்டனர்

3] அன்புள்ளம் செம்புலப் பெயல்நீர்போல கொண்டனர்

**4] செம்புலப் பெயல்நீர்போல அன்புள்ளம் கொண்டனர்**

winmeen

**118] யாதும் ஊரே, யாவரும் கேளிர் என உலக மக்களை ஒன்றிணைத்து உறவுகளாக்கிய உயர்சிந்தனை மிக்கது ---------. அஃது உரிமைக்கு உறவுகோல் ஊன்றுவது.**

1] திருக்குறள்

2] அகநானூறு

**3] புறநானூறு**

4] திரிகடுகம்

**119] பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று ------------- உலகுக்கு எடுத்துரைக்கிறது. அது மக்கட் பண்பில்லதாரை மரம் எனப் பழிக்கிறது.**

**1] திருக்குறள்**

2] அகநானூறு

3] புறநானூறு

4] திரிகடுகம்

**120] எளிய குடிமகனையும் குடிமகளையும் காப்பியத் தலைவர்களாக்கிக் காப்பியம் படைத்தனர். குடிமக்கள் காப்பியமான ------------- அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்னும் அறநெறியை உலகாள்வோர்க்கு உணர்த்துகிறது.**

1] கம்பராமாயணம்

2] மகாபாரதம்

3] மணிமேகலை

**4] சிலப்பதிகாரம்**

**121] கீழ்க்கண்டவர்களுள் எழுத்துப் பிறப்பு முறைகள் பற்றி கூறியவர்?**

1] திருவள்ளுவர்

**2] தொல்காப்பியர்**

3] ஔவையார்

4] வீரமாமுனிவர்

**122] தொல்காப்பியர் கூறும் எழுத்துப் பிறப்பு முறைகள் மொழி நூலாரையே வியப்பில் ஆழ்த்துகின்றன. 'இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப்**

**பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது' என்பார், முனைவர் ------------.**

1] ஜி.யு.போப்

2] கெல்லட்

3] கமில்சுவலபில்

**4] எமினோ**

**123] ஒருமொழிக்கு முப்பத்து மூன்று ஒலிகள் இருந்தாலேபோதும் என்பர். ஆனால், தமிழோ ----------- ஒலிகளைக் கொண்டுள்ளது.**

1] முந்நூறு

2] நாநூறு

**3] ஐந்நூறு**

4] அறுநூறு

**124] தமிழைச் செம்மொழி என அறிவித்தல் வேண்டும் என்ற முயற்சி ---------- இல் தொடங்கி -------- வரை தொடர்ந்தது.**

**1] 1901, 2004**

2] 1910, 2010

3] 1900, 2000

4] 1899, 2009

**125] நடுவணரசு -------------- ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழைச் செம்மொழியாக ஏற்பளித்தது.**

1] 2001

2] 2002

3] 2003

**4] 2004**

**126] இன்றைய மதுரையில் ---------- தமிழ்ச்சங்கம் இருந்தது.**

1] முதலாம்

2] இரண்டாம்

**3] மூன்றாம்**

4] இவற்றில் ஏதுமில்லை

**127] ---------- ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்க இதழான செந்தமிழில் பரிதிமாற் கலைஞரின் உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரை வெளியிடப்பட்டது.**

1] 1899 2] 1900 **3] 1901** 4] 1902

**128] ---------- ஆம் ஆண்டு மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை, தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டித் தீர்மானம் நிறைவேற்றி, அதை இந்திய அரசுக்கும் இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி வற்புறுத்தியது.**

1] 1915 2] 1916 3] 1917 **4] 1918**

**129] -------------- ஆம் ஆண்டு சைவ சித்தாந்த, மாநாட்டில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

1] 1915 2] 1916 3] 1917 **4] 1918**

**130] -------------- ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச்சங்கம் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியது.**

1] 1916 2] 1917 3] 1918 **4] 1919**

**131] ---------- ஆம் ஆண்டு உயர்தனிச் செம்மொழி என்னும் ஆங்கில நூல் தேவநேயப்பாவாணரால் எழுதி வெளியிடப்பட்டது.**

**1] 1966** 2] 1976 3] 1986 4] 1996

**132] ---------- ஆம் ஆண்டு நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்தது.**

1] 2001 2] 2002 3] 2003 **4] 2004**

**133] பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் -----------.**

1] அருணகிரிநாதர்

2] வில்லிபுத்தூரார்

3] பகழிக் கூத்தர்

**4] பரிதிமாற்கலைஞர்**

**134] பரிதிமாற்கலைஞர் அவர்களின் இயற்பெயர் என்ன?**

1] சங்கரேஸ்வரன்

2] விஷ்னுவர்தன்

**3] சூரிய நாராயண சாஸ்திரியார்**

4] இவற்றில் ஏதுமில்லை

**135] பரிதிமாற்கலைஞர் அவர்கள் பிறந்த ஊர் எது?**

**1] மதுரையை அடுத்த விளாச்சேரி**

2] நெற்குன்றம் அடுத்த மதுரவாயல்

3] தஞ்சையை அடுத்த கும்பகோணம்

4] சிவகங்கை அடுத்த காரைக்குடி

**136] பரிதிமாற்கலைஞர் அவர்கள் பெற்றோர் பெயர்?**

**1] கோவிந்த சிவனார் - இலட்சுமி அம்மாள்**

2] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

3] துளசிதாசன் - ராக்காயி

4] சாத்தப்பன் - விசாலாட்சி

**137] பரிதிமாற்கலைஞர் அவர்கள் தம் பெற்றோருக்கு மூன்றாவது மகனாக, ----------- ஆம் ஆண்டு சூலைத் திங்கள் ஆறாம் நாள் பிறந்தார்.**

1] 1865 **2] 1870** 3] 1875 4] 1880

**138] கீழ்க்கண்டகூற்று யாருடன் தொடர்புடையது?**

**------------------- என்னும் இவர், தந்தை கோவிந்த சிவனாரிடம் வடமொழியும், மகாவித்துவான் சபாபதியாரிடம் தமிழும் பயின்றார்.**

1] பாவாணர்

2] பெருஞ்சித்திரனார்

3] பாரதியார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**139] கீழ்க்கண்டகூற்று யாருடன் தொடர்புடையது?**

**சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் இளங்கலை (பி.ஏ.) பயின்றார். இளங்கலை தேர்வில் தமிழிலும் தத்துவத்திலும் பல்கலைக்கழகத்தில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார். தாம் பயின்ற கல்லூரியில் தத்துவத்துறை ஆசிரியர் பணி வழங்கப்பட்டதை ஏற்காது, தமிழ்த்துறைப் பணியை விரும்பிக் கேட்டு ஏற்றார். அவருக்கு ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் பேராசிரியர் பணி வழங்க முன்வந்தது. ஆனால், அவர் ஏற்கவில்லை.**

1] பாவாணர்

2] பெருஞ்சித்திரனார்

3] பாரதியார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**140] தமிழ் பயிலும் ஆர்வம் மிக்க மாணவர்களுக்குத் தம்முடைய இல்லத்திலேயே தமிழ் கற்பித்ததுடன், அவர்களை “இயற்றமிழ் மாணவர்” எனப் பெயரிட்டு அழைத்தவர் யார்?**

1] பாவாணர்

2] பெருஞ்சித்திரனார்

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**141] மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவ முயன்றவர்களுள் இவரும் ஒருவர்.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] பெருஞ்சித்திரனார்

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**142] பாசுகரசேதுபதி தலைமையில் பாண்டித்துரை தேவர் மேற்பார்வையில் -------------, உ.வே. சாமிநாதர், ராகவனார் ஆகிய பேராசிரியர்களின் துணையோடு மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] பெருஞ்சித்திரனார்

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**143] யாழ்ப்பாணம் சி.வை.தாமோதரனார், பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப் புலமையையும் கவிபாடும் திறனையும் கண்டு "--------------" என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கினார்.**

1] திராவிட சிசு

2] கவியரசு

3] தமிழ்த்தென்றல்

**4] திராவிட சாஸ்திரி**

**144] பரிதிமாற்கலைஞர், தாம் இயற்றிய "-----------------" என்னும் நூலில் பெற்றோர் இட்ட சூரியநாராயண சாஸ்திரி என்ற வடமொழிப் பெயரை மாற்றிப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழ் பெயரைச் சூடிக்கொண்டார்.**

1] நாடகவியல்

2] கலாவதி

3] ரூபாவதி

**4] தனிப்பாசுரத்தொகை**

**145] பரிதிமாற்கலைஞர் இயற்றிய 'தனிப்பாசுரத்தொகை' என்னும் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?**

1] வீரமாமுனிவர்

2] கால்டுவெல்

3] கமில்சுவலபில்

**4] ஜி.யு. போப்**

**146] பரிதிமாற்கலைஞர் சென்னைக் கிறிஸ்துவ கல்லூரியில் படித்தபோது கல்லூரி முதல்வராக இருந்தவர் யார்?**

**1] ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த வில்லியம் மில்லர்**

2] ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த டேவிட் மில்லர்

3] ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜான் மில்லர்

4] ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த நாதன் மில்லர்

**147] கல்லூரி முதல்வரும் ஆங்கிலப் பேராசிரியருமான வில்லியம் மில்லர் என்பவர் டென்னிசன் இயற்றிய "ஆர்தரின் இறுதி" என்னும் நூலில் இருந்து ஒரு பாடலில் படகின் துடுப்பு அன்னப்பறவைக்கு உவமையாக கூறப்பட்டது. தமிழில் இது போன்ற உவமைகள் உண்டா என அவர் கேட்க, --------- கம்பராமாயண குகப்படலத்தில் உள்ள "விடுநனி கடிது" என்னும் பாடலை பாடி பொருள் கூறினார்.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] பெருஞ்சித்திரனார்

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**148] தமிழ்ச்சொற்களோடு வடமொழிச்சொற்களைக் கலந்து எழுதுதல், மணியும் பவளமும் கலந்து கோத்த மாலைபோலாகும் எனத் தமிழின் அருமை உணராதோர் கூறினர். ஆனால், அது தமிழ்மணியோடு பவளத்தைப் போலச் செந்நிறம் உடையான மிளகாய்ப் பழம் கலந்தது போன்ற பயனையே தந்தது என்பது ----------- என்பவரின் கருத்து.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] பெருஞ்சித்திரனார்

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**149] பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் பட்டவகுப்புகளில் தமிழை விலக்கி, வடமொழியைக் கொண்டுவரப் பல்கலைக்கழகத்தாரால் முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், 1902 ஆம் ஆண்டில் --------------- என்பவரின் உறுதியான எதிர்ப்பால் அம்முடிவைப் பல்கலைக்கழகம் கைவிட்டது.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] உ.வே.சா

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**150] ---------- என்பவர் ரூபாவதி, கலாவதி முதலிய நற்றமிழ் நாடகங்களை இயற்றினார். அவர் ரூபாவதி, கலாவதி என்னும் பெண்பால் வேடங்களும் புனைந்து நடித்து நாடகக்கலை வளர்ச்சிக்குத் துணை புரிந்தார்.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] உ.வே.சா

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**151] -------------- என்பவர் "சித்திரக்கவி" எழுதும் ஆற்றல் பெற்றிருந்ததால், "சித்திரக்கவி" என்னும் நூலை எழுதினார்.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] உ.வே.சா

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**152] குமரகுருபரரின் நீதிநெறிவிளக்கத்தின் 51 பாடல்களுக்கு உரையெழுதி உரையாசிரியராகவும் விளங்கியவர் ----------------.?**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] உ.வே.சா

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**153] -------------- அவர்கள் தொடங்கி வைத்த "ஞானபோதினி" என்னும் இதழைப் பரிதிமாற்கலைஞர் நடத்தினார்.**

**1] மு.சி. பூர்ணலிங்கம்**

2] ரா.பி.சேதுப்பிள்ளை

3] உ.வே.சா

4] மீனாட்சி சுந்தரனார்

**154] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**இவர், தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். மாணவப் பருவத்திலேயே ஆங்கிலப்பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். பிற்காலத்தில் வடமொழி நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்தார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரின் 'செந்தமிழ்' இதழில் 'உயர்தனிச் செம்மொழி' என்னும் தலைப்பில் தமிழின் அருமை பெருமைகளை விளக்கி அரியதொரு கட்டுரை வரைந்தார். தமிழ்மொழி உயர்தனிச்செம்மொழி என முதன்முதலாக நிலைநாட்டினார்.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] உ.வே.சா

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**155] தமிழ் உள்ளங்கொண்டு அயராது தமிழ்த் தொண்டாற்றிய பரிதிமாற்கலைஞர் தமது --------- ஆம் அகவையில் (02.11.1903) இயற்கை எய்தினார்.**

1] 44 **2] 33** 3] 66 4] 55

**156] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**நடுவணரசு ---------------- என்னும் இவருக்கு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்புச் சேர்த்துள்ளது. நற்றமிழில் பெயர் சூட்டவும், நற்றமிழின் தனிப்பெருமையைக்**

**காக்கவும் உறுதி கொள்வதே --------------- என்னும் இவரின் தொண்டுக்கு நாம் காட்டும் நன்றிக்கடனாகும்.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] உ.வே.சா

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**157] பொருந்தாதது எது?**

**1] Aesthetic - இயற்கை அறிவு**

2] Biology - உயிர்நூல்

3] Classical Language - உயர்தனிச் செம்மொழி

4] Green Rooms - பாசறை

**குறிப்பு** :- Aesthetic என்பதன் சரியான தமிழ்ச்சொல் இயற்கை வனப்பு.

**158] பொருந்தாதது எது?**

**Instinct - செயற்கை அறிவு**

Order of Nature - இயற்கை ஒழுங்கு

Snacks - சிற்றுணா

Green Rooms - பாசறை

**குறிப்பு** :- Instinct என்பதன் சரியான தமிழ்ச்சொல் இயற்கை அறிவு.

**159] 'ஐ' என்னும் நெட்டெழுத்தைத் தனியாக ஒலித்துப் பாருங்கள். அது, தனக்குரிய ------------ மாத்திரை அளவிலிருந்து குறையாமல் ஒலிக்கும்.**

1] அரை 2] ஒன்று **3] இரண்டு** 4] மூன்று

**160] ஐம்பது - 'ஐ' என்னும் நெட்டெழுத்து சொல்லுக்கு முதலில் வந்து -------------- மாத்திரையாகக் குறைந்தது.**

1] அரை 2] ஒன்று 3] இரண்டு **4] ஒன்றரை**

**161] தலைவன் - 'ஐ' என்னும் நெட்டெழுத்து சொல்லுக்கு இடையில் வந்து --------------- மாத்திரையாகக் குறைந்தது .**

1] அரை **2] ஒரு** 3] இரண்டு 4] ஒன்றரை

**162] கடலை - 'ஐ' என்னும் நெட்டெழுத்து சொல்லுக்கு ஈற்றில் வந்து ------------ மாத்திரையாகக் குறைந்தது.**

1] அரை **2] ஒரு** 3] இரண்டு 4] ஒன்றரை

**163] ஔ என்னும் நெடில் எழுத்தும், ஐ என்னும் நெட்டெழுத்தைப் போலவே தனியாக ஒலிக்கும்போது, இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பதில்லை. ஆனால், சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் ஔகாரம் ---------------- மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிக்கும். அதுவே ஔகாரக்குறுக்கம் எனப்படும்.**

1] அரை 2] ஒரு 3] இரண்டு **4] ஒன்றரை**

**குறிப்பு :-** (எ.கா.) : ஔவை, வௌவால் - ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது. சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் ஔகாரம் வாராது.

**164] 'ம்' என்னும் மெய்யெழுத்து தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலித்தல் மகரக்குறுக்கம் எனப்படும். அதாவது, 'ம்' என்னும் மெய்யெழுத்து,**

**செய்யுளில் தனக்குரிய --------------- மாத்திரை அளவிலிருந்து, ---------------- மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.**

1] ஒன்று, அரை

2] இரண்டு, ஒன்று

3] ஒன்றரை, ஒன்று

**4] அரை, கால்**

**குறிப்பு :- (எ. கா.) : அ) போலும் - போல்ம் - போன்ம்.**

[ அ) செய்யுளில் இடம்பெறும் போலும், மருளும் ஆகிய மகர ஈற்றுச் சொற்கள், ஈற்றயல் உகரங் கெட்டு, போல்ம், மருள்ம் என்றாகிப் பின் போன்ம், மருண்ம் எனத் திரியும். இவ்வாறு திரியும் னகர, ணகரங்களின் முன்னுள்ள மகரம், தன் அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கும். ]

**ஆ] மருளும் - மருள்ம் - மருண்ம்.**

[ ஆ] மகர ஈற்றுச்சொல் முன் வகர (வ்) முதல்மொழி வந்து சேரும்போது, நிலைமொழி மகரம் குறைந்து ஒலிக்கும். (எ.கா.) : வரும் + வண்டி = வரும்வண்டி. 'ம்' தன் அரை மாத்திரையிலிருந்து குறைந்து கால் மாத்திரையாக ஒலிக்கும் (வரும் - இது மகர ஈற்று நிலைமொழி. வண்டி இது 'வ்' என்னும் வகர முதல் மொழி.) இவ்விரண்டு இடங்களிலும் குறைந்து ஒலிக்கும் மகரமே மகரக்குறுக்கம் எனப்படும். ]

**165] ஆய்தம் + குறுக்கம் = ஆய்தக்குறுக்கம் ('ஃ' என்னும் எழுத்து குறைந்து ஒலிப்பது.) நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து வரும் லகர, ளகரங்கள் வருமொழியிலுள்ள தகரத்தோடு (த்) சேரும்போது ஆய்தமாகத் திரியும். இவ்வாறு திரிந்த ஆய்தம் தன் --------- மாத்திரை அளவிலிருந்து குறைந்து ---------------- மாத்திரை அளவாக ஒலிக்கும். அதுவே ஆய்தக்குறுக்கம் எனப்படும். பிறகு, வருமொழியிலுள்ள தகரம் (த்) நிலைமொழிக்கேற்ப றகரமாக (ற்) வும், டகரமாகவும் (ட்) மாறிப் புணரும்.**

1] ஒன்று, அரை

2] இரண்டு, ஒன்று

3] ஒன்றரை, ஒன்று

**4] அரை, கால்**

**குறிப்பு** :- (எ.கா.) : கல் + தீது = கஃறீது. முள் + தீது = முஃடீது.

**166] குறுக்கங்கள் ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என --------------- வகைப்படும்.**

**1] நான்கு** 2] ஐந்து 3] ஆறு 4] ஏழு

**167] பல் + தீது என்பது --------------- எனப் புணரும்.**

1] பல்தீது 2] பஃதீது **3] பஃறீது** 4] இவற்றில் ஏதுமில்லை

**168] ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் ------------ ஆகும்.**

**1] திண்ணை** 2] வளையல் 3] ஐந்து 4] இவற்றில் ஏதுமில்லை

**169] பொருந்தாதது எது?**

1] ஐகாரக் குறுக்கம் - தலைவன்

2] ஔகாரக் குறுக்கம் - வௌவால்

3] ஆய்தக் குறுக்கம் - முஃடீது

**4] மகரக் குறுக்கம் - பஃறீது**

**குறிப்பு** :- மகரக் குறுக்கம் - போன்ம்

**170] ஒரு கருத்தினைச் செய்தியாகத் தெரிவிப்பது ------------ எனப்படும்.**

1] வினாத்தொடர்

2] உணர்ச்சித்தொடர்

3] கட்டளைத்தொடர்

**4] செய்தித்தொடர்**

**விளக்கம்** :- அ) பரிதிமாற் கலைஞர் மதுரைக்கருகில் உள்ள விளாச்சேரியில் பிறந்தார்.

ஆ) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். - இவ்விரு தொடர்களும் செய்திகளைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. இவ்வாறு, ஒரு கருத்தினைச் செய்தியாகத் தெரிவிப்பது செய்தித்தொடர் எனப்படும்.

**171] அன்பரசி, நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை? - இது எந்த தொடருக்கான எடுத்துக்காட்டு?**

**1] வினாத்தொடர்**

2] உணர்ச்சித்தொடர்

3] கட்டளைத்தொடர்

4] செய்தித்தொடர்

**விளக்கம்** :- வினாத்தொடர் :

அ) எழில், என்ன சாப்பிட்டாய்?

ஆ) அன்பரசி, நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை?

இ) எங்கே செல்கிறாய்?

இவ்வாறு வினாப்பொருளைத் தரும் தொடர், வினாத்தொடர் எனப்படும். என்ன? ஏன்? எங்கே? எப்படி? முதலிய வினாச்சொற்கள் வினாத்தொடரில் அமையும்.

**172] மகிழ்ச்சி, வியப்பு, துன்பம் முதலிய உணர்ச்சிகள் வெளிப்படுமாறு அமைவது - -------------------------?**

1] வினாத்தொடர்

**2] உணர்ச்சித்தொடர்**

3] கட்டளைத்தொடர்

4] செய்தித்தொடர்

**விளக்கம்** :- நாம் பேசும் செய்திகள் உணர்ச்சியை வெளிப்படுத்தும் தொடர்களாக அமைந்தால், அவற்றை உணர்ச்சித் தொடர்கள் என்கிறோம். மகிழ்ச்சி, வியப்பு, துன்பம் முதலிய உணர்ச்சிகள் வெளிப்படுமாறு அமைவது உணர்ச்சித் தொடர். என்னே என்னும் சொல்லை வியப்புக் குறித்தும், அந்தோ என்னும் சொல்லைத் துன்பம் குறித்தும் சொற்றொடர்களில் அமைத்துக் காட்டலாம்.

**(எ.கா.) :** 1] என்னே, இமயமலையின் உயரம்!

2] அந்தோ, நாய் வண்டியில் அடிபட்டுவிட்டதே!

3] "அடேயப்பா! எவ்வளவு பெரிய ஏரி!"

4] "ஐயோ, முள் குத்திவிட்டதே!"

**173] பார்த்துப் போ, கவனமாகப் படி - இது எந்த தொடருக்கான எடுத்துக்காட்டு?**

1] வினாத்தொடர்

2] உணர்ச்சித்தொடர்

**3] கட்டளைத்தொடர்**

4] செய்தித்தொடர்

**விளக்கம்** :- கட்டளைத்தொடர் : நீ பள்ளிக்குப் புறப்படும்போது, உன்னிடம் அம்மா கூறுவது என்ன? பார்த்துப் போ, கவனமாகப் படி என்றுதானே. இவ்வாறு ஒரு செயல் அல்லது சில செயல்களைப் பின்பற்றும்படி ஆணையிட்டுக் கூறுவது, கட்டளைத்தொடர்.

**174] ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டுமுடிவது, ---------------?**

1] வினாத்தொடர்

2] உணர்ச்சித்தொடர்

3] கட்டளைத்தொடர்

**4] தனிநிலைத்தொடர்**

**விளக்கம்** :- தனிநிலைத்தொடர் :- 1 . அழகன் பாடம் எழுதுகிறான். 2 . மா, பலா, வாழை ஆகியன முக்கனிகள். இத்தொடர்களில் முதல் தொடரில் அழகன் என்பது எழுவாய். இரண்டாம் தொடரில் மா, பலா, வாழை என்பன எழுவாய்கள். இவ்வாறாக, ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டுமுடிவது, தனிநிலைத்தொடர்.

**175] --------------- அதனால், ஆகையால், ஏனெனில் முதலிய இணைப்புச்சொற்களைப் பெற்று வரும்.**

**1] தொடர்நிலைத் தொடர்**

2] உணர்ச்சித்தொடர்

3] கட்டளைத்தொடர்

4] தனிநிலைத்தொடர்

**விளக்கம்** :- தொடர்நிலைத்தொடர் :- கார்மேகம் கடுமையாக உழைத்தார். அதனால், வாழ்வில் உயர்ந்தார். **நேற்று மழை பெய்தது. அதனால், ஏரி குளங்கள் நிரம்பின**. இவ்வாறு, ஓர் எழுவாய் பல பயனிலைகளைக்கொண்டு முடிவது தொடர்நிலைத்தொடர். தொடர்நிலைத்தொடர்கள் அதனால், ஆகையால், ஏனெனில் முதலிய இணைப்புச்சொற்களைப் பெற்று வரும்.

**176] ஓர் எழுவாய் பல பயனிலைகளைக்கொண்டு முடிவது -------------------.**

**1] தொடர்நிலைத் தொடர்**

2] உணர்ச்சித்தொடர்

3] கட்டளைத்தொடர்

4] தனிநிலைத்தொடர்

**177] ஒரு தனிச்சொற்றொடர் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட துணைத் தொடர்களுடன் கலந்து வருவது ----------**

1] தொடர்நிலைத் தொடர்

2] தனிநிலைத்தொடர்

3] கட்டளைத்தொடர்

**4] கலவைத்தொடர்**

**விளக்கம்** :- கலவைத்தொடர் :- 1 . நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை. 2. முருகன், இரவும் பகலும் அயராது படித்ததால் கூடுதல் மதிப்பெண்கள் பெற்றான். இவ்வாறு, ஒரு தனிச்சொற்றொடர் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட துணைத் தொடர்களுடன் கலந்து வருவது, கலவைத்தொடர்.

**178] நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை - இது எந்த தொடருக்கான சரியான எடுத்துக்காட்டு?**

1] தொடர்நிலைத் தொடர்

2] தனிநிலைத்தொடர்

3] கட்டளைத்தொடர்

**4] கலவைத்தொடர்**

**179] எழுவாய் செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர் --------------- எனப்படும்.**

**1] செய்வினைத் தொடர்**

2] செயப்பாட்டு வினைத்தொடர்

3] தன்வினைத்தொடர்

4] கலவைத்தொடர்

**விளக்கம்** :- செய்வினைத்தொடர் :- “குடியரசுத் தலைவர் உலகத் தமிழ் மாநாட்டைத்தொடங்கிவைத்தார்” . இத்தொடரில், குடியரசுத் தலைவர் - எழுவாய்; உலகத்தமிழ் மாநாடு - செயப்படுபொருள்; தொடங்கிவைத்தார் - பயனிலை; இவ்வாறாக எழுவாய் செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர் செய்வினைத் தொடர் எனப்படும். செயப்படுபொருளோடு இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) வெளிப்பட்டு வரும். சில தொடர்களில் மறைந்தும் வரும்.

**(எ.கா.) : மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார்.**

**180] மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார் - இது எந்த தொடருக்கான சரியான எடுத்துக்காட்டு?**

**1] செய்வினைத் தொடர்**

2] செயப்பாட்டு வினைத்தொடர்

3] தன்வினைத்தொடர்

4] கலவைத்தொடர்

**181] செயப்படுபொருள் வினைச்சொல்லைக் கொண்டு முடிவது -------------------?**

1] செய்வினைத் தொடர்

**2] செயப்பாட்டு வினைத்தொடர்**

3] தன்வினைத்தொடர்

4] பிறவினைத்தொடர்

**விளக்கம்** :- செயப்பாட்டு வினைத்தொடர் : (செயப்படுபொருள் வினைச்சொல்லைக் கொண்டு முடிவது). உலகத்தமிழ் மாநாடு குடியரசுத் தலைவரால் தொடங்கி வைக்கப் பெற்றது. இத்தொடரில் சொற்கள் செயப்படுபொருள். எழுவாய், பயனிலை என்னும் வரிசையில் அமைந்துள்ளன. எழுவாயோடு "ஆல்" என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும் உள்ளது. இவ்வகைத் தொடர்களில் பயனிலையோடு படு, பட்டது, பெறு, பெற்றது என்னும் துணைவினைகளுள் ஒன்று சேர்ந்து வரும்.

**182] ------------- வகைத் தொடர்களில் பயனிலையோடு படு, பட்டது, பெறு, பெற்றது என்னும் துணைவினைகளுள் ஒன்று சேர்ந்து வரும்.**

1] செய்வினைத் தொடர்

**2] செயப்பாட்டு வினைத்தொடர்**

3] தன்வினைத்தொடர்

4] பிறவினைத்தொடர்

**183] உலகத்தமிழ் மாநாடு குடியரசுத் தலைவரால் தொடங்கி வைக்கப் பெற்றது. - இந்த வாக்கியம் எந்த வினைத்தொடர் உடன் தொடர்புடையது?**

1] செய்வினைத் தொடர்

**2] செயப்பாட்டு வினைத்தொடர்**

3] தன்வினைத்தொடர்

4] பிறவினைத்தொடர்

**184] எழுவாய், தானே செய்யும் தொழிலை உணர்த்துவது -----------?**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

**3] தன்வினைத்தொடர்**

4] பிறவினைத்தொடர்

**விளக்கம்** :- தன்வினைத்தொடர் : (எழுவாய், தானே செய்யும் தொழிலை உணர்த்துவது) பாத்திமா திருக்குறள் கற்றாள். இத்தொடரிலுள்ள பாத்திமா என்னும் எழுவாய், ஒரு செயலைத் தானே செய்வதனால், இது தன்வினைத்தொடராகும்.

**185] எழுவாய், ஒரு செயலைப் பிறரைக்கொண்டு செய்விப்பது ---------?**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

3] தன்வினைத்தொடர்

**4] பிறவினைத்தொடர்**

**விளக்கம்** :- பிறவினைத்தொடர் : (எழுவாய், ஒரு செயலைப் பிறரைக்கொண்டு செய்விப்பது) பாத்திமா திருக்குறள் கற்பித்தாள். இது பிறவினைத்தொடர், பாத்திமா என்னும் எழுவாய், அச்செயலைப் பிறரைக் கொண்டு செய்விப்பதனால், இது பிறவினைத்தொடராகும்.

**186] ஒருவர் பேசுவதை, அவர் பேசியபடியே கூறுவது -------------?**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

**3] நேர்கூற்றுத்தொடர்**

4] அயற்கூற்றுத்தொடர்

**விளக்கம்** :- நேர்கூற்றுத்தொடர் : (ஒருவர் பேசுவதை, அவர் பேசியபடியே கூறுவது) ஆசிரியர், "மாணவர்களே, நாளை ஒழுக்கமுடைமையில் குறள்கள் ஐந்தனைப் படித்து வருக" , என்றார். இவ்வாறு ஆசிரியர், மாணவர்களிடம் கூறிய இத்தொடர் நேர்கூற்றுத் தொடராகும். இதில் மேற்கோள் குறிகள் இடம்பெறும். தன்மை, முன்னிலைப் பெயர்கள் இடம்பெறும். இங்கு, இப்போது, இவை, எனச் சுட்டுப்பெயர்கள் வரும். நேற்று, இன்று, நாளை எனக் காலப்பெயர்களும் வரும்.

**(எ.கா.) : தேன்மொழி பொன்னியிடம், "நான், நாளை மதுரைக்குச் செல்வேன்" என்றாள்.**

**187] தேன்மொழி பொன்னியிடம், "நான், நாளை மதுரைக்குச் செல்வேன்" என்றாள் - இந்த வாக்கியம் எந்த தொடர் உடன் தொடர்புடையது?**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

**3] நேர்கூற்றுத்தொடர்**

4] அயற்கூற்றுத்தொடர்

**188] இதில் மேற்கோள் குறிகள் இடம்பெறும். தன்மை, முன்னிலைப் பெயர்கள் இடம்பெறும். இங்கு, இப்போது, இவை, எனச் சுட்டுப்பெயர்கள் வரும். நேற்று, இன்று, நாளை எனக் காலப்பெயர்களும் வரும். - இது கீழ்க்கண்ட எந்த தொடருடன் தொடர்புடையது?**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

**3] நேர்கூற்றுத்தொடர்**

4] அயற்கூற்றுத்தொடர்

**189] ஒருவர் அல்லது பலரின் உரையாடல்களை அயலார் கூறுவதுபோல் அமைப்பது -----------?**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

3] நேர்கூற்றுத்தொடர்

**4] அயற்கூற்றுத்தொடர்**

**விளக்கம்** :- அயற்கூற்றுத்தொடர் :- ஒருவர் அல்லது பலரின் உரையாடல்களை அயலார் கூறுவதுபோல் அமைப்பது அயற்கூற்றுத்தொடர். **பொன்னியிடம் தேன்மொழி, தான் மறுநாள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினாள்.** அயற்கூற்றில் மேற்கோள் குறிகள் வாரா. இக்கூற்றில் தன்மை, முன்னிலைப் பெயர்கள், படர்க்கைப் பெயர்களாக மாறும். சுட்டுபெயர்கள் அது, அவை, அங்கே என மாறும். காலப்பெயர்கள் அந்நாள், மறுநாள் என மாறும். என்று, ஆக என்னும் இணைப்புச் சொற்களும் இடம்பெறும்.

**190] --------------- கூற்றில் மேற்கோள் குறிகள் வாரா. இக்கூற்றில் தன்மை, முன்னிலைப் பெயர்கள், படர்க்கைப் பெயர்களாக மாறும். சுட்டுபெயர்கள் அது, அவை, அங்கே என மாறும். காலப்பெயர்கள் அந்நாள், மறுநாள் என மாறும். என்று, ஆக என்னும் இணைப்புச் சொற்களும் இடம்பெறும்.**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

3] நேர்கூற்றுத்தொடர்

**4] அயற்கூற்றுத்தொடர்**

**191] செயல் அல்லது தொழில் நிகழ்வதை நேர்மறையாக உணர்த்துவது ---------- ?**

1] எதிர்மறைத்தொடர்

**2] உடன்பாட்டுத்தொடர்**

3] நேர்கூற்றுத்தொடர்

4] அயற்கூற்றுத்தொடர்

**விளக்கம்** :- உடன்பாட்டுத்தொடர்:- செயல் அல்லது தொழில் நிகழ்வதை நேர்மறையாக உணர்த்துவது, உடன்பாட்டுத்தொடர். கலைச்செல்வி கட்டுரை எழுதினாள்.

192] **கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் - இது எந்த தொடருடன் தொடர்புடையது?**

1] எதிர்மறைத்தொடர்

**2] உடன்பாட்டுத்தொடர்**

3] நேர்கூற்றுத்தொடர்

4] அயற்கூற்றுத்தொடர்

193] **கலைச்செல்வி கட்டுரை எழுதிலள் இத்தொடரில், கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை எனச் செயல் நிகழாமையைக் கூறுவதனால், இஃது ----------------?**

**1] எதிர்மறைத்தொடர்**

2] உடன்பாட்டுத்தொடர்

3] நேர்கூற்றுத்தொடர்

4] அயற்கூற்றுத்தொடர்

**விளக்கம்** :- எதிர்மறைத்தொடர் :- கலைச்செல்வி கட்டுரை எழுதிலள். இத்தொடரில், கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை எனச் செயல் நிகழாமையைக் கூறுவதனால், இஃது எதிர்மறைத்தொடர்.

194] **கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள் - என்னும் தொடர் --------------------?.**

1] எதிர்மறைத்தொடர்

**2] பொருள்மாறா எதிர்மறைத்தொடர்**

3] நேர்கூற்றுத்தொடர்

4] அயற்கூற்றுத்தொடர்

**விளக்கம்** :- பொருள்மாறா எதிர்மறைத்தொடர் :- கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள். கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் என்னும் தொடர் உடன்பாட்டுத்தொடர். கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை என்பது இதற்கான எதிர்மறைத்தொடர். மேலே உள்ள உடன்பாட்டுத் தொடரை பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்ற வேண்டுமானால், அதனை இரண்டு எதிர்மறைகளைக் கொண்ட தொடராகக், கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள் என மாற்றுதல்வேண்டும். இதற்குக் கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் என்பதே பொருள் என்பதனால், இது பொருள்மாறா எதிர்மறைத்தொடர் எனப்படுகிறது. இரண்டு எதிர்மறைச்சொற்கள் சேர்ந்து வந்தால், அஃது உடன்பாட்டுப் பொருளைத் தரும்.

**195] சந்திப்பிழையற்ற தொடர் எது?**

1] கயிறுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

**2] கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்**

3] கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

4] கயிற்று கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

**196] ஒருமை பன்மைப் பிழையற்ற தொடர் எது?**

1] அவன் கவிஞன் அல்லர்

2] அவன் கவிஞன் அன்று

**3] அவன் கவிஞன் அல்லன்**

4] அவன் அல்லன் கவிஞன்

**197] பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?**

1] அவர்களிருவருக்கும் இடையே கான்வர்கேசன் நடந்தது

2] அவர்களிருவருக்கும் இடையே விவாதம் நடந்தது

**3] அவர்களிருவருக்கும் இடையே உரையாடல் நடந்தது**

4] அவர்களிருவருக்கும் இடையே ஸ்பீச் நடந்தது

**198] வழுவுச் சொல்லற்ற தொடர் எது?**

1] வலதுபக்கம் சுவறில் எழுதாதே

**2] வலப்பக்கச் சுவரில் எழுதாதே**

3] வலப்பக்கம் சுவற்றில் எழுதாதே

4] வலபக்கம் சுவரில் எழுதாதே

**199] தனித்தமிழ் இயக்கம் தோற்றுவித்த தமிழறிஞர் ---------?**

1] பரிதிமாற்கலைஞர்

2] திரு.வி.க

3] பாவாணர்

**4] மறைமலையடிகள்**

**200] வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை; நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே; தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்; ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] வள்ளலார்**

2] திரு.வி.க

3] பாவாணர்

4] மறைமலையடிகள்

**201] "ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாய பற்று மொழிப் பற்றே. மொழிப்பற்று இல்லாதாரிடத்துத் தேசப்பற்றும் இராது என்பது உறுதி. தேசம் என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு. இயங்குவது" . ஆதலால், தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றுப் பெருக வேண்டும் என்பது எனது பிரார்த்தனை - என்று கூறியவர் யார்?**

1] அண்ணா

**2] பெரியார்**

3] முத்துராமலிங்க தேவர்

4] திரு.வி.க

**202] health is wealth - என்பதன் தமிழாக்கம் எது?**

1] அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

**2] நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

3] உழைப்பின்றி ஊதியமில்லை

4] பதறாத காரியம் சிதறாது

**203] Too much of anything is good for nothing - என்பதன் தமிழாக்கம் எது?**

**1] அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு**

2] நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

3] உழைப்பின்றி ஊதியமில்லை

4] பதறாத காரியம் சிதறாது

204] No pain No gain - **என்பதன் தமிழாக்கம் எது?**

1] அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

2] நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

**3] உழைப்பின்றி ஊதியமில்லை**

4] பதறாத காரியம் சிதறாது

205] Haste makes waste - **என்பதன் தமிழாக்கம் எது?**

1] அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

2] நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

3] உழைப்பின்றி ஊதியமில்லை

**4] பதறாத காரியம் சிதறாது**

206] Knowledge is power - **என்பதன் தமிழாக்கம் எது?**

**1] அறிவே ஆற்றல்**

2] நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

3] உழைப்பின்றி ஊதியமில்லை

4] பதறாத காரியம் சிதறாது

207] **இந்தியாவின் மிக உயர்ந்த பதவியில் இருந்த அவர், நாளொன்றுக்குப் பதினெட்டு மணி நேரம் முதல் இருபது மணி நேரம் வரை கடுமையாக உழைப்பார். சில நாள் வீடு திரும்ப நள்ளிரவுக்கு மேல் ஆகிவிடும். ஒரு நாள் அவர், நள்ளிரவுக்கு மேல் வெளிநாட்டு நண்பர் ஒருவருடன் வீடு திரும்பினார். நெடுங்காலமாக அவரிடம் வேலை பார்த்து வரும் காவலர், அன்று களைப்பு**

**மிகுதியால் உறங்கிக் கொண்டிருந்தார். அவருடன் வந்த மற்றவர்கள், அந்தக் காவலரை எழுப்பச் சென்றார்கள். அவர்களைத் தடுத்தி நிறுத்தி, 'பாவம் வயதானவர், அவரை எழுப்பாதீர்கள், அவர் தூங்கட்டும்' என்று கூறியவாறே தாமே அறையின் திறவுகோலை எடுத்துச் சென்று அறையைத் திறந்தார். அவரோடு வந்த வெளிநாட்டு நண்பர் தமது கட்டுரை ஒன்றில், அவரின் மனிதநேயத்திற்கு எடுத்துக்காட்டாய் இந்நிகழ்வைக் குறிப்பிடுகிறார். அவர்தாம் இந்தியாவின் முதன்மையமைச்சராக இருந்த ---------------.**

1] வாஜ்பாய்

**2] நேரு**

3] மன்மோகன் சிங்

4] இந்திரா காந்தி